உடனடி வெளியீடு

# உலக வங்கி

தொடர்பு: தில்லியில்: கீதாஞ்சலி சோப்ரா (91 11) 2461-7241
E-mail: gchopra@worldbank.org
வாஷிங்டனில்: கரினா மனஸ்சே (202) 473-1729
E-mail: kmanasseh@worldbank.org

## தமிழ்நாட்டில் சுகாதாரமுறைகளின் மேம்பாட்டிற்கான உலக வங்கியின் ஆதரவு
### தென்னிந்திய மாநிலம் ஒன்று இத்திட்டத்தின் மூலம் பயனடையும்

வாஷிங்டன், டிசி, டிசம்பர் 16, 2004- இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் அதன் பொது மற்றும் தனியார் சுகாதார திட்டத்தை மேம்படுத்த 110.83 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வசதி அளிக்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு சுகாதார முறை திட்டத்தில், உலக வங்கி சம்பந்தப்பட்டுள்ளது, மாநிலத்தில சுகாதாரதுறை செயல்படும் விதத்தில் புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்த உதவும். தனியார் துறையுடன் இணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பது, தரமான உத்தரவாத முறைகளை பின்பற்றுவது, தொற்றுநோய் அல்லாத நோய்களின் அதிகரித்து வரும் பிரச்சினைகளை சமாளிப்பது போன்றவை இத்திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்படும். மக்களுக்கு போதுமான அடிப்படை சுகாதாரம் அளிப்பதில், தமிழ்நாட்டின் சுகாதாரமுறை சிறப்பாக செயல்பட்டு வந்தாலும், இத்திட்டத்தின் குறிக்கோளை எட்டுவதன் மூலம் அத்தியாவசிய சீர்திருத்தங்களின் விளைவை இத்திட்டம் எடுத்துக்காட்டும்.

நோய் தடுக்கும் சேவைகளான தடுப்பூசிகள் மூலம் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு, குழந்தைகள் இறப்பு விகிதத்தையும் (ஐ. எம். ஆர்) 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தையும் கணிசமாக குறைப்பதில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. 1992 முதல் 1999 வரை குழந்தைகளின் இறப்புவிகிதம், ஆயிரத்திற்கு 71 லிருந்து 48 குழந்தைகள் என்ற அளவில் குறைந்துள்ளது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புவிகிதம் ஆயிரத்திற்கு 97 லிருந்து 63 ஆக குறைந்துள்ளது. ஆனால் இவை இலங்கை மற்றும் அண்டை மாநிலமான கேரளவை விட அதிகமாகும். உதாரணமாக இங்கு குழந்தைகள் இறப்பு விகிதம் முறையே 12 மற்றும் 16 ஆக உள்ளது.

'கடந்த பல வருடங்களாக, சுகாதார நிலையிலும், சுகாதார கவனிப்பு சேவைகள் மக்களை சென்றடைவதிலும் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது' என்று உலக வங்கியின் பொது சுகாதாரத்திற்கான மூத்த வல்லுநர் ப்ரீத்தி குடிசியா கூறுகிறார். 'ஆனாலும் குழந்தை மற்றும் தாய் இறப்பு விகிதங்கள் நிலையாக உள்ளதிலும், தொற்றுநோய் அல்லாத நோய்களின் அதிகரித்துவரும் கனம், கவனிப்பில் மோசமான தரம், பங்கு பிரச்சினைகள், மற்றும்

மாநிலத்திற்கான சுகாதார முதலீட்டில் குறைந்த நிலை போன்ற பல முக்கிய சவால்களை சந்தித்து வருகிறது

இந்த சவால்களை சந்திக்க தமிழ்நாடு அரசு 2003ம் ஆண்டில் சுகாதார கொள்கை ஒன்றை உருவாக்கியது. இதன் மூலம், பொது மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவது, அதிலும் முக்கியமாக, குறைந்த வருமான சமூகத்தினர் மற்றும் குடும்பத்தினர்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அடுத்த 20 ஆண்டுகளில் அளிக்கப்படும். இந்த கொள்கையை செயல்படுத்த இத்திட்டம் ஆதரவு அளிக்கும்.

இத்திட்டத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன:

- சுகாதார சேவைகளை பயன்படுத்திக்கொள்வது, குறிப்பாக ஏழை பழங்குடி மற்றும் வசதியற்றவர்களுக்கு இந்த சேவை சென்றடையும்;

- தொற்றுநோய் அல்லாத நோய்கள் மற்றும் போக்குவரத்து விபத்துக்கள் போன்ற முக்கிய சுகாதார தவல்களை தடுப்பதற்கான பரிசோதனை நடவடிக்கைகளை உருவாக்குவது;

- சுகாதாரத்தில் ஏற்படும் விளைவுகளை மேம்படுத்துவது, பொதுத்துறை சுகாதார முறைகளை வலுபடுத்தி தரமான சேவையை அளிப்பது, மேலும் அரசுசாரா துறைகளை மேலும் ஈடுபடுத்துவது;

- பொது துறை மருத்துவமனை சேவைகளை சிறப்பாக்கி அதன் திறனை அதிகப்படுத்துவது முக்கியமாக மாவட்ட மற்றும் துணைமாவட்ட நிலைகளில்

இதன் அனைத்து பிரிவுகளிலும் செயல்படுத்த பொது-தனியார் கூட்டாளித்துவத்தை ஆதரித்து வளர்ச்சியை ஏற்படுத்த இத்திட்டம் முனைகிறது. தொற்றுநோய் அல்லாத நோய்களை ஏற்படும் அபாயத்தை தடுக்க மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தப்படும். இரத்த அழுத்தத்தை தடுக்கவும், நிர்வகிக்கவும், சொர்விகல் புற்றுநோய் தடுப்பதற்கும் சோதனை முறைகளை பயனுள்ளதுதானா என்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் தீவிரமாக சோதிக்கப்படும். குழந்தை மற்றும் தாய்மார்களின் இறப்பு விகிதத்தை குறைக்க, பெண்கள் மற்றும் குழந்தை பிறப்பு கவனிப்பில் முழுமையான அவசரக்கால கவனம் அளிக்க இத்திட்டம் உதவிடும். மேலும், தொலைதூரத்தில் உள்ள அல்லது பழங்குடி மக்கள் உள்ள பகுதிகளுக்கு முதலில் ஆதரவு வழங்கப்படும். அடிப்படை திருத்தங்கள் மற்றும் கவனிப்பின் மேம்பட்ட தரம் ஒரே நேரத்தில் படிப்படியாக அமல்படுத்தப்படும்.

நிர்வாகம், சேவைகள் சென்றடைவது, சேவைகளின் தரத்தை மேம்படுத்தி நவீனப்படுத்துவது, சமூக பங்கேற்பை அதிகரிப்பது மற்றும் சுயஅதிகாரம் அளிப்பது போன்ற விரிவான இந்திய நாட்டிற்கான குறிக்கோள்களை எட்ட இத்திட்டம் உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வேதச வளர்ச்சி அசோசியேஷன் (ஐடிஏ) எனப்படும் உலக வங்கி உதவி அளிக்கும் பிரிவு இக்கடன் மீது 0.75 சதவிகித சர்வீஸ் தொகையும், 10 வருட காலமும், 35 வருடத்தில் முடிவடையும் காலகட்டத்தையும் நிர்ணயித்துள்ளது.

இந்தியாவில் உலக வங்கியின் செயல்களை பற்றி அறிந்து கொள்ள தொடர்புகொள்க:

http://www.worldbank.org/in